# புனித அந்தோணியார்: வார்த்தையே வாழ்வான புனிதர்

## (புனித அந்தோணியாரின் வாழ்வும் போதனைகளும்)

புனித அந்தோணியார் ‘அற்புதங்களின் புனிதர்’ மற்றும் ‘இறைவார்த்தையின் வீரபோதகர்’ எனப் போற்றப்படுகிறார். இவரது வாழ்வு போதனை, ஏழைகளுக்கான சேவை மற்றும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டது.



## வாழ்க்கை மற்றும் இறையியல் பண்புகள்

### பிறப்பும் துறவறமும்

1195-ல் லிப்ஸனில் பிறந்த பெர்னாண்டோ, இறைவனின் அழைப்பை ஏற்று ‘அந்தோணியார்’ என மாறினார்.



### வார்த்தையே வாழ்வு

வார்த்தைகள் பேசட்டும், செயல்கள் உரக்கக் கூவட்டும்’ என்பதே அவரது வாழ்வின் தாரக மந்திரம்.



### குழந்தை இயேசுவைத் தாங்கியவர்

இது இறைவனின் தாழ்மையையும், மனிதரிடையே இறைவன் இருப்பதையும் குறிக்கும் ஆன்மீக அடையாளம்.



**மனமாற்றம்**
இறைவனின் அன்பை உணரச் செய்து மக்களை மாற்றுதல்.

**கருணை**
ஏழைகளில் கிறிஸ்துவைக் கண்டு அவர்களுக்குச் சேவை செய்தல்.

**கிறிஸ்து மையம்**
ஒவ்வொரு செயலிலும் இயேசுவை முன்னிறுத்தி வாழ்தல்.

## சமூகப் பணி மற்றும் பக்தி

### ஏழைகளின் நண்பர்

ஏழைகளுக்கு உதவுவதை நீதியின் செயலாகக் கருதிட வர்; இதுவே ‘அந்தோனியார் ரொட்டி’ தர்மத்தின் அடிப்படை.



### நற்கருணைத் துதி

நற்கருணையில் கிறிஸ்துவின் உணமையான பிரசன்னத்தை உலகுக்கு உணர்த்தியவர் (உதாரணம்: மண்டியிட்ட கழுதை அற்புதம்).




### இன்றைய உலகிற்கான செய்தி

இறைவார்த்தா நேசிப்பதும், ஏழைகளை மறக்காமல் தாழ்மையுடன் வாழ்வதும் அவர் காட்டும் வழி.



# “வாழ்வால் எழுதப்பட்ட சுவிசேஷம்”

*அ.அல்போன்ஸ் — திருச்சி*




திருச்சபையின் வரலாற்றில் சில புனிதர்கள் தங்கள் வார்த்தைகளால் மட்டுமல்ல, தங்கள் வாழ்வினாலும் தலைமுறைகளை ஒளிரச் செய்துள்ளனர். அத்தகைய மகத்தானவர்களில் ஒருவரே புனித அந்தோணியார். உலகம் முழுவதும் ‘‘அற்புதங்களின் புனிதர்’’, ‘‘காணாமல் போனவற்றைக் கண்டுபிடிக்கும் புனிதர்’’, ‘‘இறைவார்த்தையின் வீரபோதகர்’’ என்று போற்றப்படும் இவர், கிறிஸ்தவ வாழ்வின் மையமான இயேசு கிறிஸ்துவை மக்களிடம் உயிரோட்டத்துடன் எடுத்துச் சென்றவர்.

ஜூன் 13 அன்று திருச்சபை இவரது திருவிழாவைக் கொண்டாடுகிறது. ஆனால் இந்த விழா வெறும் பக்தி நிகழ்வாக மட்டுமல்ல; அது இறைவார்த்தையின் வல்லமையையும், தாழ்மையின் மகிமையையும், ஏழைகளுக்கான கருணையையும், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்வையும் நினைவூட்டும் ஆன்மீக அழைப்பாகும்.



புனித அந்தோணியார் 1195 ஆம் ஆண்டு போர்ச்சுகலின் லிப்ஸன் நகரில் பெர்னாண்டோ மார்டின்ஸ் என்ற பெயரில் பிறந்தார். செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தாலும், உலக இன்பங்களைவிட இறைவனின் அன்பைத் தேர்ந்தெடுத்தார்.

இளம் வயதிலேயே துறவற வாழ்க்கையில் நுழைந்து இறையியல், திருச்சபை மரபுகள் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவைப் பெற்றார். பின்னர் பிரான்சிஸ்கன் துறவிகளின் தியாக வாழ்க்கையைக் கண்டு ஈர்க்கப்பட்டு, அவர்களுடன் இணைந்தார். அப்போது ‘‘அந்தோணியார்’’ என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்.

அந்தோணியாரின் வாழ்க்கை, மனிதன் தனது விருப்பங்களை விட்டுவிட்டு இறைவனின் சித்தத்தை ஏற்றுக்கொள்ளும்போது

எவ்வாறு ஒரு புனிதராக உயர்த்தப்படுகிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## *2. இறைவார்த்தையின் அறிவும் அறிவிப்பும்*

அந்தோணியாரின் மிகப்பெரிய சிறப்பு அவரது போதனைத் திறமையாகும். அவர் பேசும்போது மக்கள் வெறும் சொற்களைக் கேட்கவில்லை; உயிருள்ள இறைவனின்



குரலைக் கேட்டனர். திருவிவிலியத்தை வெறும் புத்தக அறிவாக அல்லாமல், வாழ்வை மாற்றும் சக்தியாக அவர் புரிந்துகொண்டார். இயேசு கூறினார்: ‘‘இறைவார்த்தையை கேட்டு அதன்படி நடப்பவர்களே என் தாயும் சகோதரர்களும் ஆவர்’’ (லூக்கா 8:21). இந்த வார்த்தையைத் தனது வாழ்வில் நிறைவேற்றியவர் அந்தோணியார். அவருடைய போதனைகளில் மூன்று முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன:

- மனமாற்றம்
- கருணை
- கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை

அவர் மக்களைப் பயமுறுத்தி மாற்றவில்லை; மாறாக, இறைவனின் அன்பை உணரச்செய்து மாற்றினார்.

## *3. ஏழைகளின் நண்பர்*



அந்தோணியார் ஏழைகளின் துயரத்தை மிகவும் ஆழமாக உணர்ந்தார். செல்வந்தர்களின் பேராசை மற்றும் அநீதியை எதிர்த்துத் துணிச்சலாகப் பேசினார். அவருடைய பார்வையில் ஏழைகளுக்கு உதவுவது ஒரு சமூக சேவை மட்டுமல்ல; அது கிறிஸ்துவுக்கே செய்யப்படும் பணியாகும்.

இயேசு கூறுகிறார்:

‘‘மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே

செய்தீர்கள்'' (மத்தேயு 25:40). இந்த வசனத்தை அவர் தனது வாழ்வின் செயல்திட்டமாக மாற்றினார்.

இறையியலின் பார்வையில், ஏழைகளை நேசிப்பது கருணை அல்ல; அது நீதியின் செயலாகும். ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் இறைவனின் சாயலிலே படைக்கப்பட்டவர்கள். புனித அந்தோனியாரின் இறையியல் விண்ணகத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை; அது மண்ணகத்து ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதாக இருந்தது. இன்று நாம் வழங்கும் ''அந்தோனியார் ரொட்டி'' என்ற தர்ம காரியத்தின் பின்னணியில் ஒரு வலுவான சமூக இறையியல் உள்ளது.

**ஏழைகளில் கிறிஸ்துவைக் காணுதல்:** ஏழைகளுக்குச் செய்யும் உதவி கடவுளுக்கே செய்யப்படுகிறது என்ற மத்தேயு நற்செய்தியின் (மத் 25:40) வாழும் சாட்சியாக அவர் திகழ்ந்தார்.

## *4. குழந்தை இயேசுவைத் தாங்கிய புனிதர்.*



புனித அந்தோணியாரின் புகழ்பெற்ற உருவப்படங்களில் குழந்தை இயேசுவை கைகளில் தாங்கியபடி காணப்படுகிறார்.

இந்த நிகழ்வு வெறும் அற்புதக் காட்சி அல்ல; ஆழமான கிறிஸ்தவ இறையியல் குறியீடாகும். தனது இதயத்தில் தாங்கிய வாழ்க்கையின் வெளிப்பாடாகும்.

குழந்தை இயேசு என்பது:

- இறைவனின் தாழ்மை
- மனிதரிடையே இறைவனின் இருப்பு
- அவதாரத்தின் இரகசியம்

உண்மையில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவை உலகிற்கு எடுத்துச் செல்லும் ‘‘உயிருள்ள பாத்திரமாக’’ அழைக்கப்படுகிறார்.

## *5. அற்புதங்களின் புனிதர்*

புனித அந்தோணியாரின் பெயருடன் எண்ணற்ற அற்புதங்கள் இணைக்கப்படுகின்றன. நோயாளிகள் குணமடைதல், காணாமல் போன பொருட்கள் கிடைத்தல், மனமாற்றங்கள் நிகழ்தல் போன்ற பல சம்பவங்கள் பக்தர்களால் சாட்சியமாகக் கூறப்படுகின்றன.

**அற்புதத்தின் உண்மையான நோக்கம்:**

- மனிதனை இறைவனிடம் அழைத்துச் செல்வது
- நம்பிக்கையை வலுப்படுத்துவது
- இறைவனின் அன்பை வெளிப்படுத்துவது

இயேசுவின் அற்புதங்களும் இதே நோக்கத்தையே கொண்டிருந்தன.

எனவே, அந்தோணியாரின் அற்புதங்கள் அவரை மகிமைப்படுத்துவதற்காக அல்ல; கிறிஸ்துவின் இரக்கத்தை வெளிப்படுத்துவதற்காகவே.

## *6. வார்த்தையே வாழ்வு:*

அந்தோனியாருக்கு விவிலியம் என்பது வெறும் வரலாற்றுப் புத்தகம் அல்ல; அது வாழும் இறைவனின் குரல். இறைவார்த்தையை வாசிப்பது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் மற்றும் கடவுளோடு இணைக்கும் பாலம் என்று அவர் நம்பினார். ''**வார்த்தைகள் பேசட்டும், செயல்கள் உரக்கக் கூவட்டும்**'' என்பது அவரது புகழ்பெற்ற கூற்று. இறையியல் என்பது மூளையில் இருக்கும் தத்துவம் அல்ல, அது வாழ்வில் வெளிப்படும் தொண்டு என்பதை அவர் வலியுறுத்தினார்.

விவிலியத்தில் இந்த இறையியல் உண்மை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் முக்கியப் பகுதி வழியாகப் புரிந்துகொள்ளலாம்.

## *நல்ல சமாரியனின் உவமை*



இந்த உவமையில் காயமடைந்த மனிதனை ஆசாரியரும் லேவியரும் பார்த்தும் உதவவில்லை. ஆனால் சமாரியன்:

- காயங்களைக் கட்டினான்.
- தனது வாகனத்தில் ஏற்றினான்.
- தங்குமிடத்திற்குக் கொண்டுசென்றான்.

• செலவுகளையும் ஏற்றுக்கொண்டான்.
அவன் அதிகம் பேசவில்லை; ஆனால் அவனது செயல்கள் அவனது அன்பைப் பேசின. இயேசு இறுதியில் கூறுகிறார்: ‘‘நீயும் போய் அவனைப் போலச் செய்.’’ (லூக்கா 10:37)

## *இயேசுவே சிறந்த எடுத்துக்காட்டு*

இயேசு அன்பைப் பற்றிப் போதித்ததோடு நிற்கவில்லை; சிலுவையில் தன் உயிரைக் கொடுத்து அன்பை நிரூபித்தார். ‘‘ஒருவர் தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.’’ (யோவான் 15:13)
சிலுவை என்பது இயேசுவின் வார்த்தைகள் செயலாக மாறிய இடம்.
அவர் மன்னிப்பைப் பற்றிப் போதித்தார்; சிலுவையில் தம்மைக் கொன்றவர்களுக்காக மன்னிப்பு கேட்டார்.
அவர் அன்பைப் பற்றிப் போதித்தார்; உயிரையே அர்ப்பணித்தார்.
அவரது செயல்கள் அவரது வார்த்தைகளைவிட வலிமையாகப் பேசின



# 7. நற்கருணை பக்தி



நற்கருணை பக்தி என்பது கத்தோலிக்க திருச்சபையின் மையமான ஆன்மீக பக்தியாகும். புனித அந்தோணியாரின் ஆன்மீக வாழ்வின் மையத்தில் நற்கருணை ஆண்டவரே இருந்தார். அவர் இயேசுவை வெறும் போதனைகளில் மட்டுமல்ல, நற்கருணையில் உயிரோடு பிரசன்னமாக இருக்கும் ஆண்டவராக ஆழமாக நேசித்தார். அவரது பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் நற்கருணையின் மகத்துவம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. நற்கருணையில் கிறிஸ்துவின் உண்மையான பிரசன்னத்தை நம்பாதவர்களுக்கு எதிராக அவர் உறுதியுடன் சாட்சியமளித்தார். மரபில் கூறப்படும் ஒரு நிகழ்வில், நற்கருணையில் இருக்கும் இயேசுவின் பிரசன்னத்தை வெளிப்படுத்த இறைவன் அவரது வழியாக ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார்

போனோவில்லோ என்ற பதிதர் நற்கருணையில் இயேசுவின் உடலும் இரத்தமும் இருப்பதை நம்ப மறுத்தபோது, ஒரு கழுதை மூன்று நாட்கள் பட்டினியாக இருந்தும், புல்லைத் தின்னாமல் நற்கருணையின் முன் மண்டியிட்ட அற்புதம் அந்தோனியாரின் நற்கருணை இறையியலுக்குச் சான்றாகும். நற்கருணை என்பது திருச்சபையின் இதயம் என்பதை அவர் தன் போதனைகளால் நிலைநாட்டினார்.

குழந்தை இயேசுவைத் தம் கரங்களில் தாங்கிய புனிதராகப் போற்றப்படும் அந்தோணியார், நற்கருணையில் மறைந்திருக்கும் அதே இயேசுவைத் தம் இதயத்தில் தாங்கியவராகவும் விளங்கினார். எனவே, புனித அந்தோணியாரின் திருவிழா நம்மை நற்கருணை ஆண்டவரிடம் நெருங்கிச் செல்லவும், திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்கவும், நற்கருணை ஆராதனையின் மூலம் கிறிஸ்துவின் அன்பில் வளரவும் அழைக்கிறது.

இன்றைய உலகிற்கு அந்தோணியாரின் செய்தி

அந்தோணியார் நமக்குக் கூறும் செய்தி:

- இறைவார்த்தையை நேசியுங்கள்.
- ஏழைகளை மறக்காதீர்கள்.
- உண்மைக்காகத் துணிவுடன் நில்லுங்கள்.
- தாழ்மையுடன் வாழுங்கள்.
- கிறிஸ்துவை உங்கள் வாழ்க்கையின் மையமாக்குங்கள்.

பதுவாவின் புனித அந்தோணியார் ஒரு அற்புதங்களின் புனிதர் மட்டுமல்ல; அவர் இறைவார்த்தையின் தீர்க்கதரிசி,

ஏழைகளின் நண்பர், தாழ்மையின் முன்மாதிரி, கிறிஸ்துவை முழுமையாக நேசித்த சீடர்.

ஜூன் 13 திருவிழா நமக்கு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது:
‘‘அந்தோணியார் கிறிஸ்துவைத் தாங்கியது போல, நாமும் கிறிஸ்துவை நமது இதயத்தில் தாங்குகிறோமா?’’
அவருடைய வாழ்வு நமக்கு அறிவிப்பது:
‘‘வார்த்தையைப் போதிப்பதை விட, வார்த்தையாகவே வாழுங்கள்; அப்போதுதான் உலகம் கிறிஸ்துவைக் காணும்.’’
புனித அந்தோணியாரே, இறைவார்த்தையை நேசிக்கவும், ஏழைகளுக்குச் சேவை செய்யவும், கிறிஸ்துவில் நிலைத்திருக்கவும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ஆமென்.

